# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 163/2023**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 02.02.2026.**

| Name : சாந்தி | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused 1, 2 present. ) (Accused 3, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 07.01.2022ம் தேதி காலை 9 மணிக்கு நடந்தது. சம்பவம் 7.00 மணிக்கோ, 8.30 மணிக்கோ நடந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். மேட்டூர் அரசு மருத்துவமனையில் யார் இருந்தார்கள் என்றால் காயமடைந்த நபர் இருந்தார். மேட்டூர் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் எப்போது கிடைத்தது என்றால் 08.01.2022ம் தேதி கிடைத்தது. நேரம் குறிப்பாக சொல்ல முடியாது.

2) எத்தனை மணிக்கு மகேந்திரபாபு காவலர் அரசு மருத்துவமனைக்கு சென்று பதிவு செய்தார் என்றால் நேரம் குறிப்பிடவில்லை. 3ம் எதிரி பாஸ்கரன் அ.சா.1 யை தலையில் மண்வெட்டியால் அடித்து காயம் ஏற்படுத்தியாக புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளாரா என்றால் கட்டையால் அடித்ததாக சொல்லியுள்ளார்.

3) 4ம் எதிரி பிரபு உருட்டு கட்டையால் அ.சா.1 சுப்பிரமணி இடது கை சுண்டுவிரலில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக புகாரோ, வாக்குமூலமோ கொடுக்கவில்லை என்றால் ஆமாம். 2ம் எதிரி அண்ணாமலை, அ.சா.1 சுப்பிரமணியையோ , அ.சா.2 கலாவையோ உருட்டு கட்டையால் முதுகில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். 1ம் எதிரி சந்திரா அ.சா.2 கலாவின் தலைமுடியை பிடித்து அடித்ததாக என்னிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

4) 4ம் எதிரி பிரபு மண்வெட்டியால் அ.சா.1 சுப்பிரமணி தலையின் மீது அடித்ததாக அ.சா.3 பெருமாள் அவரது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் புகார் மனுவில் சொல்லியுள்ளார். 3ம் எதிரி பாஸ்கர் அ.சா.3 பெருமாளை ரோட்டில் இழுத்து அவரது கையால் பெருமாளின் கழுத்தில் அடித்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. 4ம் எதிரி சம்பவயிடத்தில் இல்லை என நான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

5) நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு எதிரிகள் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**